**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097167

1. District மாவட்டம் : கடலூர் PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2018 FIR No. மு.த.அ. எண்: 11/2018 Date நாள்: 26.12.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: As Amended by The Prevention of Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 24.12.2018 11.30 hrs Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.12.2018 Time நேரம் : 0900 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time நேரம் : 0900 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி யூனியன் ஆபீஸ், பரங்கிப்பேட்டை

(c) In case outside limit of this Police Station, then the Name of P S -- District --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ஷேக் அமீர். (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஷேக் ரஹீம்,
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 58 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வியாபாரம் (g) Address : முகவரி நெ.223, எம்.ஜி.ஆர். ரோடு, பி.முட்லூர், கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

பானுமதி, M.S. யூனியன் ஆபீஸ், பரங்கிப்பேட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 26.12.2018 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு நான் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது அலுவலகத்திற்கு வந்த கடலூர் மாவட்டம், பி.முட்லூர், எண்.223, எம்.ஜி.ஆர். ரோடு, என்ற முகவரியில் வசிக்கும் ஷேக் ரஹீம் மகன் R.ஷேக் அமீர் (வயது 58) என்பவர் கணினி தட்டச்சு புகார் மனுவை கொடுத்துக்கொண்டார். அதனை பெற்றுக்கொண்ட நான் விசாரணைக்கு பின்னர் உரிய ஒப்புதல் பெற்று இன்று காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விவரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர் R.ஷேக் அமீர், (வயது 58), S/o, ஷேக் ரஹீம், எண்.223, எம்ஜிஆர் ரோடு, பி.முட்லூர், கடலூர் மாவட்டம், பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, கடலூர். அய்யா, நான் கடலூர் மாவட்டம் புவனகிரி முட்லூர் கிராமத்தில் நம்பர்.223, எம்ஜிஆர் சாலையில் எனது குடும்பத்துடன்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..........................
Rank: நிலை ......................No. எண் ..........

வசித்து வருகிறேன். நான் சுமார் 25 வருடம் வெளிநாட்டில் வேலை பார்த்து தற்போது இந்தியா வந்து எனது வீட்டுக்கு அருகாமையில் அமீர் டெலிகாம் என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள். எனது இளைய மகள் ரேஷ்மா பேகம் என்பவருக்கும், விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகத்தை சேர்ந்த நியாசுதீன் என்பவருக்கும், கடந்த 15.01.2016 ந்தேதியன்று திருமணம் செய்துவைக்கப்பட்டது. தமிழக அரசால் வழங்கப்படும் திருமண நிதியுதவி திட்டத்தில் பயன்பெறுவதற்காக எனது மகள் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே எனது மனைவி ஜான் பேகம் திருமண நிதியுதவி கேட்டு ஆன்லைன் வழியில் பதிவு செய்திருந்தார். இதுவரையில் நிதியுதவி ஏதும் எங்களுக்கு வழங்கவில்லை. 2016ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் பணம் வழங்கிவிடுவார்கள் என நான் கேள்விப்பட்டு கடந்த 24.12.2018ந்தேதியன்று காலை சுமார் 11.30 மணிக்கு நான் பரங்கிப்பேட்டை யூனியன் ஆபீசுக்கு நேரில் சென்று, அந்த அலுவலகத்தில் திருமண நிதியுதவி திட்டம் சம்மந்தமாக MS ஆக பணிபுரியும் மேடம் பானுமதி என்பவரை சந்தித்து எனது மகளின் திருமண நிதியுதவி சம்மந்தமாக விசாரித்தேன். பின்னர் அவர் எனது மகள் சம்மந்தமான விவரங்களை என்னிடம் கேட்டுத்தெரிந்துக்கொண்டு, அவரது அலுவலகத்தில் உள்ள பைல்களை பார்த்துவிட்டு, 'உங்களது மகளின் திருமண நிதியுதவிக்கான பணம் சேங்க்ஷன் ஆகி வந்திருக்கு, மேற்கொண்டு உங்களுக்கு பவுன் மற்றும் பணம் தரவேண்டியுள்ளது, ஆதலால் உங்கள் மனைவியின் பெயரில் உள்ள அசல் பேங்க் பாஸ்புக், அவரின் போட்டோக்கள் இரண்டு மற்றும் திருமணமான எனது மகளின் கல்விச்சான்றிதழ்கள் மற்றும் அவைகளின் ஜெராக்ஸ் ஆகியவற்றை கொண்டுவந்து 26.12.2018 ந்தேதியன்று என்னிடம் கொடுங்கள் மற்றும் அத்துடன் பணம் ரூ.3,000/- கொண்டு வந்து கொடுங்கள்' என்று சொன்னார். நான் அவரிடம் ரூ.3,000/- அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டதற்கு, அவர் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணம் இல்லை என்றும், அலுவலகத்தில் நிறைய செலவு இருக்கிறது, அதற்காகத்தான் கேட்கிறேன், உங்களுக்கு அரசாங்கம் இவ்வளவு பணமும், பவுனும் கொடுக்குது இல்லையா, ஆபீஸ் செலவுக்கு ரூ.3,000/- கொடுத்தால்தான் இந்த பணமும், பவுனும் பிரச்சனை இல்லாம உடனே கிடைக்க ஏற்பாடு செய்வேன் என கூறினார். பின்னர் நான் அங்கிருந்து கிளம்பி எனது வீட்டிற்கு சென்று, நடந்தவற்றை எனது மனைவியிடம் சொன்னேன். லஞ்சம் கொடுத்து பணம் மற்றும் பவுனை பெற எனக்கும், எனது மனைவிக்கும் விருப்பமில்லை. எனது மகளின் திருமணத்திற்காக அரசால் வழங்கப்படும் உதவி

தொகையை கொடுப்பதற்காக லஞ்சம் கேட்கும் MS பானுமதி என்பவர் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் புகார் செய்ய வேண்டும் என முடிவு செய்தோம். நான் இன்று (26.12.2018) தங்களிடம் புகார் மனு கொடுக்கிறேன். பானுமதி என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,000/- த்தை நான் கொண்டுவந்துள்ளேன். என்னிடம் ரூ.3,000/- லஞ்சப்பணம் கேட்ட MS பானுமதி என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் 26.12.2018, அய்யா நான் இன்று 26.12.2018 காலை 0800 மணிக்கு நிலைய அலுவலலில் இருந்தபோது வாதி ஷேக் அமீர் ஆஜராகி கொடுத்த மேலே கண்ட புகாரை பெற்று பின்னர் வாதி புகாரில் குறிப்பிட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலரை பற்றியும் புகாரின் உண்மை தன்மை பற்றியும் ரகசிய விசாரணை செய்ததில் வாதி கொடுத்த புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர் மீது பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், இன்று 26.12.2018 காலை 09.00 மணிக்கு வாதி கொடுத்த புகாரின் மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.11/2018, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் வாதி கொடுத்த உண்மை புகார் மனுவுடன் முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலையும் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

26/12/18
Inspector of Police,
V&AC, Cuddalore.

அனுப்புநர்

R.ஷேக் அமீர், வயது 58,
S/o, ஷேக் ரஹீம்,
எண்.223, எம்ஜிஆர் ரோடு,
பி.முட்லூர்,
கடலூர் மாவட்டம்.

பெறுநர்

உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
கடலூர்.

அய்யா,

நான் கடலூர் மாவட்டம் புவனகிரி முட்லூர் கிராமத்தில் நம்பர்.223, எம்ஜிஆர் சாலையில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சுமார் 25 வருடம் வெளிநாட்டில் வேலை பார்த்து தற்போது இந்தியா வந்து எனது வீட்டுக்கு அருகாமையில் அமீர் டெலிகாம் என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள். எனது இளைய மகள் ரேஷ்மா பேகம் என்பவருக்கும், விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகத்தை சேர்ந்த நியாசுதீன் என்பவருக்கும், கடந்த 15.01.2016 ந்தேதியன்று திருமணம் செய்துவைக்கப்பட்டது. தமிழக அரசால் வழங்கப்படும் திருமண நிதியுதவி திட்டத்தில் பயன்பெறுவதற்காக எனது மகள் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே எனது மனைவி ஜான் பேகம் திருமண நிதியுதவி கேட்டு ஆன்லைன் வழியில் பதிவு செய்திருந்தார். இதுவரையில் நிதியுதவி ஏதும் எங்களுக்கு வழங்கவில்லை. 2016ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் பணம் வழங்கிவிடுவார்கள் என நான் கேள்விப்பட்டு கடந்த 24.12.2018ந்தேதியன்று காலை சுமார் 11.30 மணிக்கு நான் பரங்கிப்பேட்டை யூனியன் ஆபீசுக்கு நேரில் சென்று, அந்த அலுவலகத்தில் திருமண நிதியுதவி திட்டம் சம்மந்தமாக MS ஆக பணிபுரியும் மேடம் பானுமதி என்பவரை சந்தித்து எனது மகளின் திருமண நிதியுதவி சம்மந்தமாக விசாரித்தேன். பின்னர் அவர் எனது மகள் சம்மந்தமான விவரங்களை என்னிடம் கேட்டுத்தெரிந்துக்கொண்டு, அவரது அலுவலகத்தில் உள்ள பைல்களை பார்த்துவிட்டு, 'உங்களது மகளின் திருமண நிதியுதவிக்கான பணம் சேங்க்ஷன் ஆகி வந்திருக்கு, மேற்கொண்டு உங்களுக்கு பவுன் மற்றும் பணம் தரவேண்டியுள்ளது, ஆதலால் உங்கள் மனைவியின் பெயரில் உள்ள அசல் பேங்க் பாஸ்புக், அவரின் போட்டோக்கள் இரண்டு மற்றும் திருமணமான எனது மகளின் கல்விச்சான்றிதழ்கள் மற்றும்

Scanned by CamScanner

அவைகளின் ஜெராக்ஸ் ஆகியவற்றை கொண்டுவந்து 26.12.2018 ந்தேதியன்று என்னிடம் கொடுங்கள் மற்றும் அத்துடன் பணம் ரூ.3,000/- கொண்டு வந்து கொடுங்கள்' என்று சொன்னார். நான் அவரிடம் ரூ.3,000/- அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டதற்கு, அவர் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணம் இல்லை என்றும், அலுவலகத்தில் நிறைய செலவு இருக்கிறது, அதற்காகத்தான் கேட்கிறேன், உங்களுக்கு அரசாங்கம் இவ்வளவு பணமும், பவுனும் கொடுக்குது இல்லையா, ஆபீஸ் செலவுக்கு ரூ.3,000/- கொடுத்தால்தான் இந்த பணமும், பவுனும் பிரச்சனை இல்லாம உடனே கிடைக்க ஏற்பாடு செய்வேன் என கூறினார். பின்னர் நான் அங்கிருந்து கிளம்பி எனது வீட்டிற்கு சென்று, நடந்தவற்றை எனது மனைவியிடம் சொன்னேன். லஞ்சம் கொடுத்து பணம் மற்றும் பவுனை பெற எனக்கும், எனது மனைவிக்கும் விருப்பமில்லை. எனது மகளின் திருமணத்திற்காக அரசால் வழங்கப்படும் உதவி தொகையை கொடுப்பதற்காக லஞ்சம் கேட்கும் MS பானுமதி என்பவர் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் புகார் செய்ய வேண்டும் என முடிவு செய்தோம். நான் இன்று (26.12.2018) தங்களிடம் புகார் மனு கொடுக்கிறேன். பானுமதி என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,000/- த்தை நான் கொண்டுவந்துள்ளேன். என்னிடம் ரூ.3,000/- லஞ்சப்பணம் கேட்ட MS பானுமதி என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
R. [signature]
26.12.18

ஐயா,

இன்று 26.12.18 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு பெற்றுக்கொண்ட புகார் மனுவை பெற்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர் பற்றியும், புகாரின் உண்மை தன்மை பற்றியும் ரகசிய விசாரணை செய்ததில், வாதி கொடுத்த புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர் மீது பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், இன்று 26.12.18 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு வாதி கொடுத்த புகாரின் மீது கடலூர் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 11/18 u/s 7 of prevention of corruption Act 1988, as Amendment by The prevention of corruption (Amendment) Act 2018 -ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

S. [signature]
26/12/18
Inspector of police.
V&AC, CUDDALORE.

Scanned by CamScanner